# 3 உரையாடல் எழுத்துரு: சொற்களைத் தேர்ந்தெடுத்தல் மற்றும் யார், எங்கே, என்ன கதைகள்

**இலக்கு**

பின்வரும் நான்கு கருத்துரைகள் மாணவர்களின் ஆக்கத்திறனையும் தம்முடைய முதல் மொழியில் எழுதும் மகிழ்ச்சியினையும் ஊக்குவிக்கின்றன. அவற்றின் கவர்ச்சியான, கீழ் தொடக்கநிலைப் பண்பு காரணமாக இப்பயிற்சிகள் கலப்பு வயதுக் குழுக்களுக்கு மிகவும் ஏற்றவையாக அமைகின்றன, இதனால் இளைய மாணவர்கள் வயது கூடியவர்களிடமிருந்து கற்கலாம்.

## 1. உரையாடல் கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

கருவிகள்:
வாக்கியத் தொடக்கங்களையுடைய தாள்கள் (மாணவன்/மாணவிக்கு ஒரு தாள்)

அ) ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்கள் தொடக்குவனவாக அமைகின்றன. அவை முக்காற்புள்ளியுடன் முடியவேண்டும். எல்லா மாணவர்களும் அப்படியான தொடக்கத்தையே பெறுகின்றனர் அல்லது அப்படியான தொடக்கத்தை எழுதுகின்றனர்.

ஆ) அவர்கள் இரண்டு வாக்கியங்களுடன் கதையைத் தொடர்ந்து பின்னர் தாளினை அடுத்தவருக்குக் கடத்த அவர் கதையைத் தொடர்கிறார். இன்றியமையாதது: ஒவ்வொரு மாணவன்/மாணவியின் தொடர்ச்சி ஒரு முக்காற்புள்ளியுடனேயே முடியவேண்டும்.

எடுத்துக்காட்டு:

> முன்னொரு காலத்தில் ஒரு சிறிய எலி இருந்தது. அது தன்னுள் எண்ணியது.
>
> "நான் மட்டும் மிகப் பெரியதாகவும் வலுவுடையதாகவும் இருந்தால்"
> அப்பொழுது ஒரு பூனை அங்கு வந்தது.
> எலியைக் கண்டது. அது கொடூரமாகச் சிரித்துக் கூறியது:
>
> "................................."

இ) தாள்கள் எல்லா வகுப்பு அல்லது குழு ஊடாக சுற்றிச்செலுத்திய பின், அவை உரத்துப் படிக்கப்படும். இவ்வகையில் மாணவர்கள் செயற்பாடு சரியாக நிறைவேறியதா என்பதை மதிப்பிட முடியும்.

## 2. சொல்லை தெரிந்தெடுத்து எழுதும் கதைகள்

3 - 6 ஆந் தரம் | 20 மணித்துளிகள்

அ) ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஒருதாளின் மேற்பகுதியில் ஒரு வாக்கியத்தை எழுதிவிட்டு அதனை அடுத்தவருக்குக் கடத்துவான்/கடத்துவாள்

ஆ) அடுத்த மாணவன்/மாணவி "தேர்ந்தெடுத்த" (முதல் வாக்கியத்திலிருந்து "பொறுக்கியது") குறைந்தது ஒரு சொல்லினையாவது உள்ளடக்கிய ஒரு தொடர்ந்து வரக்கூடிய வாக்கியத்தை எழுதுவான்/எழுதுவாள். இந்தச் சொல்லின் கீழ் கோடிடப்படும். பின்னர் அத்தாள் அடுத்தவருக்குக் கடத்தப்படும், அவர் முதல் மாணவரின் வாக்கியத்திலிருந்து ஏதாவதொரு சொல்லினை உட்படுத்தி நடைமுறையினை மீண்டும் செயற்படுத்துவார்.

இ) இந்நடைமுறை வகுப்பில் அல்லது குழுவில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு தாள் துண்டினைப் பெறும்வரை தொடரும்.
வேறுபாடு: சொல் பொறுக்கிய கதைகள் தனியாகவும் எழுதப்படலாம். இன்றியமையாதது என்னவெனில், மாணவன்/மாணவி முன்னமைத்த வாக்கியத்திலிருந்து பொறுக்கப்பட்ட ஒரு சொல் ஒவ்வொரு வாக்கியத்திலும் அமைவதை உறுதிப்படுத்தவேண்டும்.